# தூதன்

தூதன்-25 மே 2016 தூது-5

## தென் இந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்



சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில்போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும்.
நீதிமொழிகள் 6:6-8

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 07 |
| உதவி ஆயரம்மா மடல் | 09 |
| செயலர் மடல் | 11 |
| தொழிலாளர் தினம் | 13 |
| காகம் | 14 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 16 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 17 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| தெரிந்து கொள்வோம் | 22 |
| Young Readers Column | 24 |
| வேதவினா போட்டி | 26 |
| Health Tips | 28 |
| Night's Spark | 31 |
| ஆராதனை பாடல்கள் | 32 |
| Birthday Celebrants | 33 |
| Wedding Anniversary Celebrants | 37 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2824696, Fax: 04-2826162, Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: csitapar@emirates.net.ae

# சபை போதகர் மடல்

"பொதுநன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது" (1 கொரிந்தியர் 12:7)

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன்விசுவாசிகளே,

இவ்வாண்டின் ஐந்தாம் மாதத்தின் நல்வாழ்த்துக்களையும், இறையாசியையும் உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். மே மாதம் என்றாலே கடுங்கோடையின் கோபம் நம் நினைவுக்கு வருகிறது. புவி வெப்பமயமாதல் (Global Warming) காரணத்தால் கடந்த 20 ஆண்டுகளில் (1996-2016) ஆர்க்டிக் மற்றும் அண்டார்க்டிக் துருவப்பனி 40% வரை குறைந்துள்ளதாக விண்வெளித் தகவல்கள் எடுத்துக்காட்டுகின்றன. கோடை என்பது கடுங் கோடையாகவும், குளிர் என்பது கடுங்குளிராகவும் பூமியின் பல இடங்களில் காணப்படுகிறது. இது மனுக்குலத்திற்கும், பிற படைப்புகளுக்கும் புதிய நோய்களையும், உறுப்புக் குறைவுகளையும் உண்டாக்கி பல உயிரினங்கள் அழிந்துபோக (Extinction) அடித்தளமாகவும் விளங்கிவிடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் திருமறை நமக்குத் தரும் நம்பிக்கைகள் மற்றும் அறைகூவல்கள் தரும் செயல்பாடுகளின் வழியில் நாம் செல்வோமாயின் இப்புவியை நம் வருங்காலத் தலைமுறைகளுக்கும் உரித்தாக்கக்கூடும்.

## உழைப்பாளர் திருநாள் (Labour Day Festival)

மே மாதம் முதலாம் தேதி உழைப்பாளர் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. உலகின் பல்வேறு தேசங்களிலும் இத்திருநாள் உழைப்பின் மகிமையையும், உழைப்பாளர்களின் முக்கியத்துவத்தையும், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் மற்றும் ஓய்வு பற்றியும் எடுத்தியம்புகிறது. இதையொட்டி இம்மாதத்தின் முதல் வெள்ளி வழிபாட்டை நாம் International Labour day சிறப்பு வழிபாடாகக் கொண்டாடுகிறோம். ஆண்கள் ஐக்கிய சங்கமும் Camp-ல் உள்ள உழைப்பாளர்களும் இணைந்து இதைச் சிறப்பிக்க இருக்கின்றனர். கத்தோலிக்கத் திருச்சபை இத்திருநாளை தச்சர் யோசேப்புத் திருநாளாகக் (Joseph the Carpenter's day) கொண்டாடுகிறது. சீர்திருத்தச் சபைகளில் சிறப்பு வழிபாடுகளோடு, சிறப்புக் கூடுகைகள், கருத்தரங்குகள் மற்றும் உரிமைப்போராட்ட நிகழ்வுகளும் பல இடங்களில் நடத்தப்படுகின்றன. திருமறையின் ஆண்டவர் ஆதாம் காலம்தொட்டே உழைப்பை மனிதப்பொறுப்பாகவும், வாழ்வாதாரமாகவும் வழங்கியிருக்கிறார்.

ஆறு நாள் வேலை செய்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்ததாகச் சுட்டப்படும் கடவுள் எல்லா நாளுமே நம்மைக் காத்து நடத்துகிறவராயிருக்கிறார். ஏழாம் நாள் ஓய்வுநாளாகக் (Sabbath day) கருதப்பட்டு அதில் உழைக்கிற எந்த படைப்பும் ஓய்வு பெறவும், இறைவனுடன் இசைந்து இறை பக்தியிலும், இறையுறவிலும் திளைக்கவும் அழைக்கப்படுகிறது. நிலத்திற்குக்கூட 7-ம் ஆண்டு ஓய்வாண்டாகக் கருதப்படுகிறது( லேவி.25). இது 50-ம் ஆண்டில் நிலத்தை இழந்தவர் அதை மீண்டும் பெறும் யூபிலிக்கு வழிநடத்துகிறது. அதேநேரம் 'சோம்பல்' என்பது பாவமாகக் கருதப்பட்டுக் கண்டிக்கப்படுகிறது ( 2 தெசலோனிக்கேயர் 3:6-12). ஆகவே To work is to worship, Work while you work, Play while you play, செய்யும் தொழிலே தெய்வம் போன்ற முதுமொழிகள் உழைப்பு மற்றும் ஓய்வின் தெய்வீகத்தையும், மகத்துவத்தையும் எடுத்தியம்புகின்றன.

### பெந்தேகொஸ்தே திருநாள் (Pentecost Day Festival)

இம்மாதத்தின் 15-ம் நாள் பெந்தேகொஸ்தே திருநாளாகத் திருச்சபைகளில் கொண்டாடப்படுகிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்து மூன்றாம் நாள் உயிரோடெழுந்து, பிறகு 40 நாட்கள் தம்மைப் பின்பற்றிய சீடர் போன்ற நம்பிக்கையற்றோருக்கும் உயிர்ப்பின், தொடர்வாழ்வின் நம்பிக்கையை ஏற்படுத்தினார். அதற்குப்பின்பு பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதை (Ascension Day) விசுவாசத்துடன் அறிக்கை செய்கிறோம். உயிர்ப்புத் திருநாளிலிருந்து சரியாக 50-வது நாள் தூய ஆவியர் ஆதிச்சீடர் மீதும், மேலறையிலிருந்த 120 பேர் மீதும் இறங்கி, அவர்களை ஆற்றல்படுத்தி, அப்போஸ்தலரால் எழுப்பிய அனல்மூட்டும் ஆன்மீக நிகழ்வே பெந்தேகொஸ்தே பண்டிகையாகக் கொண்டாடப் படுகிறது. கிறிஸ்து பிறப்பில் தந்தையாம் கடவுளின் அன்பைக் கொண்டாடுகிறோம், உயிர்ப்புத் திருநாளில் மைந்தராம் கடவுளின் மீட்பைக் கொண்டாடுகிறோம், பெந்தேகொஸ்தேவில் தூய ஆவியராம் கடவுளின் ஆற்றலைக் கொண்டாடுகிறோம். (Christmas is to celebrate the Love of God the Father, Easter is to celebrate the redemption of the Son and Pentecost is to celebrate the power of the Holy Spirit). கிரேக்க மொழியில் Penta என்றால் ஐந்து Costa என்றால் பத்து. கிரேக்க மொழியில் பெந்தேகொஸ்தே எனப்படும் இந்த 50-ஆம் நாள் பண்டிகை இறைவனுக்கு நன்றி செலுத்தும் விழாவாகக் கொண்டாடப்பட்டது (யாத். 23:16, எண். 28:28, லேவி. 23:16a). விளைநிலங்களின் முதற்பலனை கடவுளுக்குக் காணிக்கையாகப் படைக்கும் ஏழு வாரங்களின் விழா (யாத் 34:22), முதல் கதிர்க்கட்டு காணிக்கையாகச் செலுத்தப்பட்டு, பாஸ்காவிலிருந்து 50-ம் நாளில் அப்பாஸ்கா நினைவுகூரப்பட்டது (லேவி.23:15).

இடைக்காலத்தில் இது ஓர் உடன்படிக்கைத் திருநாளாகக் கொண்டாடப்பட்டு (Covenantal Festival during Intertestament Period), புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தூய ஆவியாரின் அருட்பொழிவுத் திருநாளாகவும் (Formation of the Church, the community of believers) கொண்டாடப்பட்டு வருகிறது. ஆகவே இப்பண்டிகை கிறிஸ்துமஸ், ஈஸ்டர் போன்று சிறப்பான வரலாற்றுப் பண்டிகையாகும். அதிகக் கல்வியறிவும், அனுபவமுற்ற ஆதிச்சீடர்கள் அங்குகூடி வந்தோரின் தாய்மொழிகளில் பேசும் ஆற்றல் பெற்று ஆண்டவர் இயேசுவின் அன்பு, மரணம், உயிர்ப்பை நற்செய்தியாய்ப் பறைசாற்றி, ஆண்டவருக்குள் யூதர்-கிரேக்கர், அடிமை-உரிமைக்குடிமக்கள், ஆண்-பெண் (கலா.3:28) போன்ற எந்த வேறுபாடுகளுமற்ற புதியதோர் திருக்குடும்பமான திருச்சபையை உருவாக்கினர்.

## திரித்துவத் திருநாள் (Trinitarian Day Festival)

கடவுள் தந்தையாகவும், மைந்தனாகவும், தூய ஆவியராகவும் மூன்று தன்மைகளில் செயல்படுகிறார் என்பதுதான் திரித்துவம். (God the Father, God the Son and God the Holy Spirit united as one is the Godhead Trinity). தந்தை படைப்பாளராகவும் (Creator), மகன் மீட்பாளராகவும் (Redeemer), ஆவியார் பாதுகாப்பாளராகவும் (Sustainer) புரிந்து நம்பப்படுகிறார். ஏன் இந்த திரித்துவம்? மூவரா? மூவரும் ஒருவரா? திரித்துவம் என்ற வார்த்தை நேரடியாகத் திருமறையில் இல்லை. ஆனால் கடவுளைப் பன்மைத்தன்மையில் பார்த்து (ஆதி.1:26) கடவுளின் செயல்பாடுகளை கிறிஸ்துவின் பிறப்பு (தந்தை = திட்டம், மகன் = பிறப்பு, ஆவியார் = கருத்தரிப்பு) திருமுழுக்கில் துவங்கி (தந்தை = குரல், மகன் = முழுக்கு, ஆவியார் = புறா) மற்றும் சிலுவை மட்டும் (தந்தையை நோக்கி வேண்டுதல், மகனின் தியாகம், தூய ஆவியாரின் ஆற்றல்) காணமுடிகிறது. திரித்துவத்தை யோவான் தனது முதல் நிருபத்தில் அழகாய் எடுத்து இயம்புகிறார். பரலோகத்தில் சாட்சியிடுகிறவர் மூவர். பிதா, வார்த்தை, தூய ஆவி இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். எப்படியெனில் பூலோகத்தில் சாட்சியிடுகிறவைகள் மூன்று: ஆவி, தண்ணீர், இரத்தம் இம்மூன்றும் ஒவ்வொரு மனிதருக்குள்ளும், படைப்பிற்குள்ளும் பரவி ஒருமைப்பட்டுள்ளது (1 யோவான் 5:7,8). ஆகவே நாமே திரித்துவத்தின் நடமாடும் சான்றுகள். ஆவி அல்லது உயிரே தூய ஆவியானவரையும், தண்ணீர் படைப்பின் கடவுளையும், இரத்தம் கிறிஸ்துவையும் சுட்டுகிறது. நம்மையும் உலகையும் பாதுகாக்கும் இறைத்திட்டத்திற்கு ஆவியாரின் துணையுடன் அர்ப்பணிப்போம். ஆமென்.

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. கிறிஸ்தோபர் ரத்தினசாமி.

# ஆயரம்மா மடல்

## கூனியான பெண்ணின் நிமிர்ந்த விசுவாசம்

## (The Lifted Faith of an afflicted Women)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

மே மாதத்தின் மே தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதத்தின் முதலாம் நாள் உழைப்பாளர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. உழைக்கும் ஒவ்வொருவரையும் கடவுள் ஆசீர்வதிப்பாராக. உழைத்து ஓய்வு பெற்றோரைப் பலப்படுத்துவாராக. நமது ஆண்டவரும் உழைக்கும் ஆண்டவரே! அவர் ஓய்வு நாளிலும் உழைப்பவர், ஆசி வழங்குகிறவர், அற்புதம் செய்பவர், சுகப்படுத்துகிறவர், உபதேசிக்கிறவர், உழைக்கும் மக்களோடு என்றும் இருக்கிறவர். “கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார், உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு கொடுக்கும் தேசத்தில் உன்னை ஆசீர்வதிப்பார்”. (உபா. 28:8).

கடந்த நான்கு மாதங்களாய் நம்மைக் காத்து வழிநடத்தின கர்த்தருக்குத் தோத்திரம் உண்டாவதாக. கடவுள் நம் எல்லாரோடும், எல்லார் மேலும், எல்லாருக்குள்ளும் இருக்கிறவர், அன்பு செலுத்துகிறவர், கரிசனை காட்டுகிறவர், வாழ்வு தருபவர், உயர்த்தி நிறுத்துகிறவர். நாம் பாதிக்கப்பட்டு சோர்ந்து போகும் நேரத்தில் தைரியத்தையும், உற்சாகத்தையும் தருகிறார். அநேக நேரங்களில் நம்முடைய தனிமையான, கைவிடப்பட்ட சூழ்நிலையில் நம் அருகில் நின்று கண்ணீரைத் துடைத்து, கவலைகள் நீக்கி சந்தோஷத்தைத் தருகிறார். ஆனால் இப்படிப்பட்ட கர்த்தரின் இருப்பு நிலையை நாம் உணர்வது இல்லை. நாம் கேட்பதெல்லாம் கிடைக்கும்போது அதிகமாய் துதிக்கிறோம், கர்த்தரை மகிமைப்படுத்துகிறோம். தோத்திரம் சொல்லுகிறோம். ஆனால், சிறு சிறு துன்பங்கள் அல்லது கஷ்டங்கள், போராட்டங்கள், தோல்விகள், இழப்புகள் மற்றும் ஆபத்துக்கள் வரும்போதும், நாம் கேட்பதைப் பெற்றுக்கொள்ளாதபோதும் தளர்ந்து போகிறோம். நம்பிக்கை குன்றியவர்களாகக் காணப்படுகிறோம். நம்மால் தோல்விகளைச் சந்திக்கவோ, கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ளவோ முடிகிறதில்லை. சத்துருவை ஜெயிக்க தைரியமில்லை. அப்படியானால் பதினெட்டு ஆண்டுகளாய் நிமிர முடியாமல் பாதிக்கப்பட்டிருந்த பெண்ணின் நிலை எப்படி இருந்திருக்கும்?!

- பல ஆண்டுகளாய் உடல் நிமிர்த்தப்பட முடியாவிட்டாலும், நிமிர்ந்த விசுவாசம் கொண்ட பெண் (லூக்கா 13:11) Symbol of long awaiting lifted faith

- பொது இடங்களிலே பெண்களோ, நோயுற்றவர்களோ வர அனுமதி இல்லாத ஆதிக்க சமுதாயத்தில் தைரியமாய் வெளியே வந்த பெண் Symbol of boldness in Oppression

- இயேசு கிறிஸ்துவால் பொதுவிலே அடையாளம் காணப்பட்ட பெண் (லூக்கா 13:12அ) Symbol of Christ identification

- ஆண்டவரால் பலவீனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட பெண் (லூக்கா 13:13ஆ) Symbol of redemption

- பெற்ற நன்மைக்காய் உடனடியாகக் கடவுளை மகிமைப்படுத்தின பெண் (லூக்கா 13:13) Symbol of glorification

- ஓய்வு நாளிலும் ஆண்டவர் நன்மையின் வேலையைச் செய்கிறார் என்பதற்கு அடையாளமான பெண் (லூக்கா 13:14) Symbol of good labour

- பெண்களும் ஆபிரகாமின் குமாரத்திகளே என்பதற்குச் சாட்சியான பெண் (லூக்கா 13:16) Symbol of Abrahamic descendants

- கர்த்தரின் ஆற்றலுக்கு அடையாளமான பெண் (லூக்கா 13:17) Symbol of divine power

இந்த பெண்ணின் வழியாக நாம் கற்றுக்கொள்ள வேண்டியவைகள் பல உள்ளன. நம்பிக்கையற்ற சூழ்நிலையிலும் ஆண்டவர் நிச்சயமாய் செயல்படுவார் என்ற விசுவாசத்தோடு நாம் வாழ வேண்டும். ஆண்டவர் அற்புதத்தைச் செய்யச் கூடியவர் என்றும், காலம் தாழ்த்தினாலும் விடுதலை உண்டு என்பதையும் நம்ப வேண்டும். எச்சூழ்நிலையிலும் மக்கள் முன்பாக வெட்கப்படாமல் ஆண்டவரை அணுகவும், அறிக்கையிட்டு மகிமைப்படுத்தவும் வேண்டும். இந்த ஆழமான விசுவாசத்தில் நாம் வளரவும், ஆண்டவரின் ஆசியோடு சோதனையின் மத்தியிலும் சாத்தானை ஜெயிக்கவும் நம் வாழ்வை அர்ப்பணிப்போமாக!

இறைப்பணியில்,

திருமதி.தீபா கிறிஸ்தோபர்,

ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

# உதவி போதகர் மடல்

இயேசு கிறிஸ்துவில் பிரியமானவர்களே, கர்த்தருடைய பெரிதான கிருபையால் 2013-ம் ஆண்டு ஜுன் மாதம் 6-ம் தேதி C.S.I தமிழ் திருச்சபை, துபாய் - உடன் இணைந்து இறைப்பணி செய்ய கடவுள் என்னை இங்கு அழைத்து வந்தார். என்னைப் பணி நியமனம் செய்த முன்னாள் பிரதம பேராயர் The Most. Rev. Dr. G. Devakadasham அவர்களையும், என்னை விமான நிலையத்தில் வரவேற்ற நமது முன்னாள் ஆயர் அருள்திரு. J. ஜெயக்குமார் அவர்களையும், அப்போதைய சபை செயலாளர் திரு. M. துரைராஜ், உபதலைவர் திரு. ஜீவன் மேக்ஸ்வெல், பொருளாளர் திரு. குமார் ரெஜினால்டு மற்றும் சபை நிர்வாகக் குழுவின் இதர அங்கத்தினர்களையும், சபைஊழியர் திரு. I. சைமன் அவர்களையும், சகோ. K.C. ஸ்டாலின் அவர்களையும் நன்றியுடன் நினைவுகூருகிறேன்.

இப்போதும் திருச்சபைத் திருப்பணியில் எனக்கு நல்லாசோனைத் தந்து வருகின்ற தற்போதைய பிரதம பேராயர் The Most. Rev. Dr. G. Dyvasirvadam அவர்களுக்கும், இறைப்பணியில் என்னை மேற்பார்வை செய்து, திருச்சபை வளர்ச்சிக்காகவும், திருப்பணியின் மேம்பாட்டிற்காகவும் எனக்குத் தகுந்த வழிகாட்டுதல் தந்துவரும் பாசத்திற்குரிய ஆயர் அருள்திரு. S. கிறிஸ்தோபர் ரத்தினசாமி அவர்களுக்கும், ஆயரம்மா திருமதி. தீபா கிறிஸ்தோபர் அவர்களுக்கும் சபைச்செயலாளர் திரு. சிங் ரெத்னம், உபதலைவர் திரு. S. புஷ்பராஜ், பொருளாளர் திரு. J. ஆன்ட்ரூஸ் மற்றும் சபை நிர்வாகக் குழுவின் இதர அங்கத்தினர்களுக்கும் எம் குடும்பத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

கடந்த 3 ஆண்டுகளும் தவறாமல் ஜெபித்து, நலன் விசாரித்து, உபசரித்து, உதவி செய்து, இறைப்பணியில் உடன் பங்கேற்ற துபாய், ஃபுஜைரா, இராஸ் அல் கைமா திருச்சபைகளின் அத்தனை உடன் விசுவாச வீட்டாருக்கும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். UAE தென்னிந்திய திருச்சபையின் ஆயர்களோடும், இறைமக்களோடும் கிடைத்த நல்ல உறவுக்காக அவர்களுக்கும் நன்றி சொல்லி மகிழ்கிறேன். அனைத்திற்கும் மேலாக, மூன்றாண்டு இறைப்பணியில் எல்லாச் சூழ்நிலைகளிலும் உடனிருந்து இந்நாள்வரை உயிர், உடல், ஆரோக்கியம், ஞானம், வார்த்தை, வல்லமை, பாதுகாவல் தந்து வழிநடத்திய சர்வ வல்லமையுள்ள கடவுளுக்கு சதாகாலங்களிலும் கனமும், மகிமையும் உண்டாவதாக. கர்த்தருக்குச் சித்தமானால் மே மாதம் 29-ம் தேதி இரவு இங்கிருந்து புறப்பட்டு தாயகம் திரும்புகிறோம். நாங்கள் சார்ந்திருக்கிற கன்னியாகுமரி பேராயத்தில் பொறுப்பேற்று, நிறைவேற்றப்படவிருக்கிற புதிய திருச்சபையின் இறைப்பணிக்காகவும், எங்களுக்காகவும் நினைவுவரும் பொழுதெல்லாம் ஜெபித்துக்கொள்ளுங்கள். நாங்களும் தொடர்ந்து உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

"ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்துடன் வாழ்த்துங்கள். கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோமர் 16:16)

பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள வம்ச வரலாற்றுக் குறிப்புகளையும், நீளமான பெயர் பட்டியல்களையும் கொண்ட அதிகாரங்களைப் பொதுவாக பலர் வாசிக்க விரும்புவதில்லை. ஆனால், இவற்றை வாசித்து அறிதலும், புரிதலும் அவசியம். ஏனெனில் வேதபுத்தகம் ஓர் கற்பனைக் கதையல்ல என்பதையம், வரலாற்றில் செயல்படும் கடவுள் கற்பனைக் கதாபாத்திரம் அல்ல என்பதையும் நாம் வரலாற்று தெளிவுடன் உணர்ந்து கொள்ள முடியும். இவ்வதிகாரத்தை அதற்கு சான்றாகக் கொள்ளலாம்.

ரோமாபுரியிலுள்ள தேவபிரியருக்கும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் கடிதம் எழுதும் அப். பவுல், இறைப்பணியில் உடன்நின்ற ஒவ்வொருவரது பெயரையும், அவர்களது செயலையும் நினைவுகூர்ந்து, "சபையார்" அவர்களை வாழ்த்தும்படி உற்சாகப்படுத்துகிறார். எந்த அதிகாரங்களிலும் இவர்களதுப் பெயரைக் குறிப்பிடாத அப். பவுல், இவர்களை இவ்வதிகாரத்தின் வழியாக ரோமாபுரி திருச்சபைக்கு மட்டுமல்ல, உலக திருச்சபைக்கே அறிமுகம் செய்கிறார். அத்துடன், இன்றைய திருச்சபைக்குத் தேவையான இரண்டு காரியங்களையும் நினைவுபடுத்துகிறார்.

1. பாராட்டுதல்
2. எச்சரிக்கையாயிருத்தல்

## யாரைப் பாராட்ட வேண்டும்?

1. கர்த்தருக்காக பணி செய்வோரை பாராட்டுங்கள்
2. கர்த்தருக்காக பாடநுபவிப்போரை பாராட்டுங்கள்
3. கர்த்தருக்காக பரிசுத்தமாக வாழ்வோரை பாராட்டுங்கள்

## யாரைப் பாராட்டக் கூடாது?

1. கர்த்தருக்காக பணிசெய்ய தடையாய் இருப்போரைப் பாராட்டக் கூடாது. மீறினால், அநேக துன்மார்க்கரை உருவாக்கக் காரணமாகிறோம்

2. கர்த்தருக்காக பாடநுபவிக்கத் தயங்குவோரையும் பாராட்டக் கூடாது. மீறினால், இயேசு கிறிஸ்துவின் போதனைக்கு எதிராக செயல்படுகிறோம்

3. மாய்மாலமாக வாழ்வோரை பாராட்டக்கூடாது. மீறினால், திருமறை, திருச்சபை, திரித்துவக் கடவுளுக்குத் துரோகம் செய்கிறோம்.

“ஒருவரையொருவர் வாழ்த்துதல்” அல்லது “பாராட்டுதல்” மனித உறவினை மேம்படுத்துவதற்கான அடித்தளம், நற்செயல்கள் நடப்பிக்கத் தூண்டும் வழிமுறை. ஆனால், அச்செயல் உண்மைத் தன்மையுடன் இருக்கவேண்டும்.

“எச்சரிக்கையாயிருத்தல்” என்பது நமது தனி வாழ்வை உலகின் தீமைகளிலிருந்து, தீயோனாகிய பிசாசின் ஆதிக்கங்களிலிருந்து வேறுபடுத்தி தூயவர்களாகவும், நாம் பயன்படுத்தும், திருமறைக்கும், பற்றுறுதிக்கும், பரிசுத்தராம் கடவுளுக்கும் கீழ்ப்படிந்து நடக்கச் செய்யும். (ரோமர் 16:17-20). இங்கே. நாம் கவனிக்கவேண்டிய இன்னொரு காரியம், ரோமருக்கு கடிதம் எழுத உதவிய “தெர்த்தியு”வை மட்டும் அப். பவுல் வாழ்த்துகிறார். தேவனை மட்டும் மகிமைப்படுத்தி கடிதத்தை நிறைவு செய்கிறார். ரோமருக்கு எழுதிய நிருபத்தை இந்த அடித்தளத்தை பயன்படுத்தி தொடர்ந்து தியானியுங்கள். இன்னும் அநேக காரியங்களை நீங்கள் புரிந்து கொள்ள ஆண்டவர் உங்களுக்கு அருள் செய்வார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும்கூட இருப்பதாக. ஆமென்.

இறைப்பணியில் உங்களுடன்,
அருட்திரு. V. சாமுவேல் ஜெபராஜ்.

# உதவி ஆயரம்மா மடல்

அன்பு நிறைந்தவரும் நம்மீது அதிக கரிசனையுள்ளவருமாகிய ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் தூதன் வாசகர்கள் அனைவருக்கும் அன்புகலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மூன்று ஆண்டு காலமாக உங்களோடு இணைந்து இறைப்பணியில் பங்கேற்கவும், குறிப்பாக, ஃபுஜைரா, இராஸ்அல்கைமா கிளைத் திருச்சபைகளில் பெண்கள் ஐக்கியச் சங்கத்தின் வளர்ச்சிக்காக செயல்படவும் கர்த்தர் கிருபைப்பாராட்டினார். ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். ஊழியத்தில் இணைந்து செயல்பட்ட அத்தனைபேரையும் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். அத்துடன் நமது மாதாந்திரப் பத்திரிகையான தூதன் வழியாக எழுதி வெளியிட்ட “பாடல் சொல்லும் வரலாறு”, “சிந்தனைக்கு ஓர் சிறுகதை” போன்ற படைப்புகளை வாசித்து என்னை உற்சாகப்படுத்திய அன்புக்குரியவர்களுக்கும் நன்றி சொல்லுகிறேன்.

### சிந்தனைக்கு ஓர் சிறுகதை

பள்ளிக்கூடப் பேச்சுப்போட்டியின் முடிவு வெளியாகிவிட்டது. இந்த முறையும் ஜிஜோவுக்கு இரண்டாம் பரிசுதான் கிடைத்திருந்தது. வழக்கம்போல் விஜிலுக்குத் தான் முதல் பரிசு!

எப்படியாவது இவனை ஜெயிச்சாகணுமே! என்னச் செய்யலாம்...? சரி... சரி... அடுத்தது ஓவியப் போட்டி வரும். டிராயிங் மாஸ்டர் நான் நல்லாப் படம் வரைவேன்னு சொல்லியிருக்காரே, இதிலேயாவது எப்படியும் முதல் பரிசைத் தட்டிவிடணும் என்று நினைத்தான் ஜிஜோ.

ஜிஜோ ஓவியப் போட்டிக்காகப் பயிற்சியே செய்ய வில்லை. தான் பெரிய ஓவியன் என்ற நினைப்பு அவனுக்கு. ஆனால், விஜிலோ பென்சிலை எடுத்து ஒரு யானையின் படம் வரைந்து பார்த்தான். படம் திருப்திகரமாக வரவில்லை. மீண்டும் மீண்டும் முயன்று பார்த்து நன்றாக வரையப் பழகிக் கொண்டான்.

ஓவியப் போட்டி துவங்கியது. பெருமையுடன் படம் வரைய ஆரம்பித்தான் ஜிஜோ. ஓர் இயற்கைக் காட்சியின் படம் அது. தென்னைமரம் திடீரென்று ஒழுங்காக வரவில்லை. ஜிஜோக்கு எரிச்சலாக வந்தது. அதை அழித்துவிட்டு மீண்டும் வரைந்தான். எப்படியோ படத்தை வரைந்து விட்டு வண்ணம் தீட்ட ஆரம்பித்தான்.

அவனுடைய இயற்கைக் காட்சி அவனுக்கே திருப்தி தரவில்லை. விஜிலின் பக்கம் திரும்பிப் பார்த்தவன் ஆச்சரியத்தில் அதிர்ந்து விட்டான். உயிருள்ள யானை ஒன்று நிற்பது போல் இருந்தது. ஜிஜோவுக்கு ஒரே பொறாமையாக இருந்தது. அப்போது டிராயிங் மாஸ்டர் விஜிலை எதற்காகவோ கூப்பிட்டார். அவன் உடனே எழுந்து சென்றான்.

விஜிலுக்கு இதிலும் முதற்பரிசு கிடைத்துவிடும் என்று உணர்ந்த ஜிஜோ ஒரு திட்டமிட்டான். விஜிலின் படத்தின்மீது கொட்டுவதற்காக பச்சை வண்ணம் இருந்த கோப்பையைத் தூக்கினான் ஜிஜோ. அது வழுக்கி விட்டது. கோப்பை கீழே விழுந்து வண்ணம் ஜிஜோ வரைந்த படத்தில் பரவியது மட்டுமன்றி அவனுடைய சட்டை மீதும் தெறித்தது.

அப்போது அங்கே வந்த விஜில், அடடா, உன்னுடைய படம் மட்டுமல்லாமல் சட்டையும் பாழாய்ப் போயிட்டுதே என்று வருத்தப்பட்டான். ஜிஜோக்குக் கண்ணீர் வந்தது. தன்னுடைய கெட்ட எண்ணத்தையும், அதனால் கிடைத்த தண்டனையையும் கூறி அவனிடம் மன்னிப்புக் கேட்டான்.

கவலைப்படாதே, ஜிஜோ. நீயும் திறமைசாலிதான். ஒழுங்காக முயற்சி செய்தால் நீயும் முதற்பரிசு வாங்கி விடலாம் என்று ஆறுதல் கூறினான் விஜில். “வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம்” (கலாத்தியர் 5:26).

உங்களுக்காக ஜெபிக்கும்,

திருமதி. செலின் சாமுவேல்.

# செயலர் மடல்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த 4 மாதங்களும் கண்மணி போல் காத்து நடத்தி, 5-ம் மாதத்திற்குள்ளாக கடந்து வரச் செய்த தேவாதி தேவனைத் துதிக்கிறேன். 2-4-2016 அன்று VBS Final day ceremony, JSS International School-ல் மிகவும் சிறப்பாக நடந்தது. இந்த பள்ளியை VBS நடத்த திறந்து கொடுத்து உதவிய பள்ளியின் Principal Mr.James Richard அவர்களுக்கும், திருமதி.Leelabai Jeyabalan அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இதில் பங்கேற்ற Director Mrs.Subi Kissinger, Teachers, Volunteers மற்றும் இந்தியாவிலிருந்து வந்து நடத்தித் தந்த Directors யாவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறிக்கொள்கிறோம்.

15-04-2016 அன்று நமது ஆலயத்தில் திடப்படுத்தல் ஆராதனை நடந்தது. இதில் 11 பேர் பங்கு பெற்று திடப்படுத்தல் பெற்று கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்பினராய் இணைந்தனர். இந்த ஆராதனையை நடத்தித்தந்த Rt.Rev. Dr.M.Joseph மதுரை ராமநாதபுரம் Bishop அவர்களுக்கும், மதுரை ராமநாதபுரம் Diocese Clerical Secretary Rev.David Jebaraj அவர்களுக்கும் நம் சபையின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கிறோம்.

Bible Study முதலாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் புதன் கிழமைகளில் நடைபெற்று வருகிறது. யாவரும் கலந்துகொண்டு பயன்பெற அழைக்கப்படுகிறோம். 29-04-2016 அன்று பாடல் ஆராதனை ஜெபல் அலி கிறிஸ்துநாதர் ஆலயத்தில் நடைபெற்றது. அநேகர் பங்கேற்று கர்த்தரை தனி நபர்களாக, குழுக்களாகப் பாடி மகிமைப்படுத்தினர்.

29-04-2016 அன்று காலை ஆராதனையில் முதல் வழிபாட்டில் Bro.Isaac Joe அவர்களும், இரண்டாம் வழிபாட்டில் IEM பொதுச்செயலர் Rev.Dr.Rajasingh Elias அவர்களும் பங்குபெற்று செய்தியை பகிர்ந்து கொண்டனர். அவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இம்மாதம் நடைபெறுகின்ற உழைப்பாளர் தினம், மருத்துவப் பணியாளர் திருநாள், திரித்துவத் திருநாள் மற்றும் இளஞ்சிறார் சிறப்பு வழிபாடுகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

சிங் ரெத்னம், செயலர்

நமது சபையில் புதிய அங்கத்தினர்களாக சேர்ந்துள்ள அனைவரையும் ஜெபத்தோடு வரவேற்போம்.

## NEW MEMBERS LIST

| Sl.No. | Name | Mem.No. | Area |
|---|---|---|---|
| 1 | Mr. D.R.Robin Thanga Raja | 2641 | Dubai |
| 2 | Mr. B.Jeevaraj | 2642 | Dubai |
| 3 | Mr. Willingdon Madhuram | 2643 | Dubai |
| 4 | Mr. Ielin M | 2644 | Dubai |
| 5 | Mr. Joshin Alfred J | 2645 | Dubai |
| 6 | Mr. Bencin Bensam | 2646 | Dubai |
| 7 | Mr. Vijil Kumar F | 2647 | Dubai |
| 8 | Mr. P.Philip Danisrael | 2648 | Dubai |
| 9 | Mr. D.Yesuthas | 2649 | Dubai |
| 10 | Mr. Amos Ponraj P | 2650 | Dubai |
| 11 | Mr. Binil Winston B | 2651 | Dubai |
| 12 | Mr. N.Sathesh Nadarajan | 2652 | Dubai |
| 13 | Mrs. Sylvia Muthuraj | 2653 | Dubai |
| 14 | Mr. M.Suresh Bose | 2654 | Dubai |
| 15 | Mrs. Chandira John S. | 2655 | Dubai |
| 16 | Mr. Jenson Soundarraj | 2656 | Dubai |
| 17 | Mr. Batrich Joshua | 2657 | Dubai |
| 18 | Mr. Churchil Raj P. | 2658 | Fujairah |
| 19 | Mr. J.Gladwin Vasantha Priyan | 2659 | Dubai |
| 20 | Miss. Divya Prabha Manimuthu | 2660 | Dubai |
| 21 | Mr. Mano Harrison V.E | 2661 | Dubai |
| 22 | Mr. D.Devasahayam | 2662 | Dubai |

# தொழிலாளர் தினம்

விவிலியத்தின் விவரத்திலே விடுதலைதினம்
வாரத்தில் ஒருநாள் விடுப்பும்
வரவுவரப் பெருகும் வருமானம்
வரலாற்றில் குறிக்கப்பட்ட திருநாளாம்

நசுக்கப் பட்ட தொழிலாளர்
பொசுக்கப் பட்ட மனிதாபிமானம்
கசக்கப் பட்ட ஆதாயம்
கொதிகொதித் தெழுந்த மனிதகூட்டம்

கண்டெடுத்த தொழிலாளர் கொண்டாட்டம்
கண்டம் விட்டுக் கொண்டாடும்
எண்டிசையும் முன்னெடுத்துப் போற்றிடும்
இன்பநாள் அன்புநாள் மேதிருநாள்

தன்வேலையில் கண்ணாய் இருப்பவன்
முன்னேற்றப் பாதையிலே பயணிப்பான்
எந்நாளும் நல்லுறவில் வளருவான்
தந்நலனும் பொதுநலனும் பேணுவான்

உழைக்கக் கசக்கும் மனதுக்கும்
வழக்கம் ருசிக்க வரலாமா ?
உழைத்துக் களைத்து உண்ணவும்
தழைக்கும் அகில மேதினம் !

ஆதாரம் : ஆதியாகமம் 2:3
நீதிமொழிகள் 22:22,29.
2தெசலோனிக்கேயர் 3:10

கவிதை எண் : 187

கவிதை ஆக்கம் : மணிமுத்து

# காகம்

வேதத்தில் முதன் முதலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பறவை காகம். நோவா, பூமியின் மேல் ஜலம் வற்றியிருக்கிறதா என அறிய பேழையிலிருந்து ஒரு காகத்தை வெளியே விட்டான். இது ஒற்றுமைக்கும், கூடி வாழ்தலுக்கும், பகிர்ந்துண்ணுதலுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் பறவையினம் ஆகும். ஊர் வீதிகளில் கிடக்கும் அசுத்தங்களை உண்டு சுத்தம் செய்வதால் "ஆகாயத்தோட்டி" எனப்படுகிறது. இவை ஆகாரத்திற்காக கர்த்தரை நோக்கிக் கூப்பிடும். "காக்கைக்குஞ்சுகள் தேவனை நோக்கிக் கூப்பிட்டு, ஆகாரமில்லாமல் பறந்து அலைகிறபோது, அவைகளுக்கு இரையைச் சவதரித்துக் கொடுக்கிறவர் யார்?" (யோபு 38:41). நாமும் நமது எல்லாத் தேவைகளுக்கும் கர்த்தரை நோக்கிப் பார்க்க வேண்டும். "கூரை மேலே சோறு போட்டால் ஆயிரம் காக்கா", "காகம் கரைந்துண்ணும்" என்பதும் பழமொழிகள். சாப்பாடு கிடைத்தால் தானும் சாப்பிட்டு மற்ற காகங்களை கூப்பிட்டு கொடுக்கும். ஆம், "பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடு" (ஏசாயா 58:7). "இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன், ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன்." (லூக் 3:11)என்று கூறிய படி "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்" (அப் 2:44). நாமும் அவர்களைப் போல வாழவும், மட்டுமல்ல இயேசுவின் அன்பை ருசித்த நாமும் மற்றவர்களுக்கு அவரை அறிவிக்க அழைக்கப்படுகிறோம். அவைகள் கூடி வாழ்வதுபோல நாமும் கர்த்தருடைய பிள்ளைகளோடு ஐக்கியம் கொள்ள வேண்டும். "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" (சங் 133:1). ஒரு காகம் செத்து விட்டால் எல்லா காகங்களும் கூடி சத்தம் போடும். "அழுகிறவர்களுடனே அழுங்கள்." (ரோமர் 12:15) என்று கூறியிருக்கிறதே. காகங்கள் கேரீத் ஆற்றண்டையில் தங்கியிருந்த எலியாவை போஷித்தது. "காகங்கள் அவனுக்கு விடியற்காலத்தில் அப்பமும் இறைச்சியும், சாயங்காலத்தில் அப்பமும் இறைச்சியும் கொண்டுவந்தது" (1 இரா 17:6). தேவன் படைத்த படைப்பில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பயன் உண்டு. எதையும் யாரையும் கீழ்த்தரமாகவோ, இழிவாகவோ எண்ணக் கூடாது.

காகங்களைப் போல நாமும் மற்றவர்களுக்கு உதவ அழைக்கப்படுகிறோம். "பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள், அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" (ரோமர் 12:13). காகம் சுறுசுறுப்புள்ள பறவை. எப்போதும் கவனமாயிருக்கும். தனது எல்லைக்குள் வரும் கழுகை விரட்டியடிக்கும். கழுகு காகத்தை விட மிகவும் பலம் வாய்ந்தது.

நாமும் ஆவிக்குரிய ஜீவியத்தில் விழிப்போடு காணப்பட்டு கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாம் என்று சுற்றித் திரிகிற பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும். "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்." (யாக் 4:7). மற்றும் அவை யாரையும் நம்பாது. ஆம், "நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்" (ஏசா 2:22). மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம். "கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங். 40:4). காகம் தன் குஞ்சுகளைப் பாதுகாப்பாக வைத்து, பறக்கவும் கற்றுக் கொடுக்கும். நாமும் நமது பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும். "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதி. 22:6). அது நாளைக்காக கவலைப்படாது. "காகங்களைக் கவனித்துப்பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை, அவைகளுக்குப் பண்டசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை, இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார்"(லூக்கா 12:24). அவருடைய பிள்ளைகளாகிய நாமும் நம்முடைய தேவைகளில் கவலைப்பட்டுக் கலங்காமல், வழியில்லாத சூழ்நிலையிலும் காகம் மூலமாக எலியாவை போஷித்தது போல வழிகளை உருவாக்கும் மாறாத நம் தேவனை நம்புவோம். நிச்சயம் நம் தேவைகளைச் சந்தித்து நம்மை உயர்த்துவார். காகங்களைப் பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாய் இருக்கிறீர்கள்.

காக்கா கூட்டம் சத்தமா கரயிர சத்தம் எதுக்காக - தனக்கு
கெடச்ச உணவ மத்த காக்காக்கு சொல்லணும் அதுக்காக - வாவா
இயேசு அன்பு தெய்வம் இது உனக்கு நல்லா தெரியுமே
அது தெரியாத மத்தவங்களுக்கு அறிவிக்க நீயும் வருவாயா?

இனிதா மோசஸ்

# நீங்கள் கிறிஸ்தவரா...

கிருபையும், சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்,
நீதியும், சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்.
சங்கீதம் 85:10

இன்றைய
காலகட்டம்
இனிதானதா
இல்லை
இருளானதா
இருவித கேள்வி
எழும்தானே...
இன்று...
நிகழும் நிகழ்வுகள்
அன்றாடம் நடக்கும்
அநீதிகள்
அக்கிரமங்கள்
இவைகளைப்
பார்க்கும்போது
நல்லவர்கள்
மத்தியில்
ஒருவித நடுக்கம்
வரும்தானே...
கவலையை
விட்டுவிடுவோம்
கர்த்தரின் பாதம்
தொட்டுவிடுவோம்.
கொடிய படைகளின்
கொடி சாய்ந்துவிடும்
சமாதானம்
வந்துவிடும்
கர்த்தரின் கிருபை
என்றுமே வற்றாத
ஜீவநதியென்பதும்
கர்த்தரின் பாதம்
பற்றியவரை-அது
கண்ணீர் போக்கி
தண்ணீர் பாய்ச்சி
பாதுகாக்கும்.
வறுமையாயினும்
வலிமையுள்ளோர்
வருத்தினாலும்
காசு வருமேயென்று
மாசு தரும்
பொய் சாட்சிக்கு
விலை போகாது
மெய்யாக
வாழ்வோரை...
இவ்வண்ணமே
நல்லெண்ணம்
கொண்டோரை...
கர்த்தரின்
கிருபையும் சத்தியமும்
சந்திக்கும் சத்தியவான்
உயரங்களில்
உயர்வான்.
இயேசுவின்
காலம் முதல்
நீதிக்கும் அநீதிக்கும்
போட்டிதான்
நீதி வழுவாதவர்
வாழ்ந்துகொண்டுதான்
வருகிறார்கள்
வாழ்த்துக்கள்
அவர்களை
வானளாவ
உயர்த்துகிறது
பொறுமையும்
சாந்தமும்
சமாதானமும்
சகிப்புத்தன்மையும்
சாதிக்கும் சாதனை
புவிதனில் பெரிது
நீதியும் சமாதானமும்
உடையவர்
மனிதருள்
மாணிக்கமென
மதிக்கப்படுவர்.
எவை எவை
எப்படி எப்படி
எங்கு நடப்பினும்
பாவமும்
கடுமையான
கொடுமையும்
எவரெஸ்ட் சிகரத்தை
எட்டினாலும்
இரத்தம் ஆறாக
நித்தம் ஓடினாலும்
மூவுலகும்
வெல்லும் நாமம்
மூவுலகும்
சொல்லும் நாமம்
இயேசுவின் நாமமே
கிருபையின் சாகரம்
கிறிஸ்துவின் பூமணம்
இயேசுவின் நாமமே
நல்குமே சகல ஷேமமே
இயேசுவின் நாமமே
கீதம் தரும்
வேதம் ஆகுமே
இயேசுவின் நாமமே
காம, கோபம்
போக்குமே
இயேசுவின் நாமமே
நம் பயத்தை நீக்குமே
இயேசுவின் நாமமே
நாசம் செய்யும்
நம் பாவமே
தொழிலாளர் தினமான
இன்று தொழிலாளர்
வாழ்வு மலர
ஜெபிப்போமே.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

## ஆபிராம்

ஆபிராம் தன் தகப்பனுடைய பெரிய தெய்வத்தை உடைத்து போட்டுவிட்டு வெளியே ஓடிப்போனார். இதையெல்லாம் பார்த்த தேராகு, தன் வீட்டை விட்டு வெளியே விரைந்து, அரசனாகிய நிம்ரோத்தின்முன் சென்று அவரைப் பணிந்து கொண்டார். நிம்ரோத் அவரை நோக்கி, உனக்கு என்ன வேண்டும்? என்றார்.

தேராகு அரசனை நோக்கி, “ஐம்பது வருடங்களுக்கு முன்பாக எனக்கு ஒரு குழந்தை பிறந்தது. அது நீர் சொன்னபடியே என் ஆண்டவனுக்குச் செய்தது. எனவே, நீர் அவனைப் பிடித்து உமக்கு முன்பாக கொண்டுவந்து அவனை நீதிவிசாரணை செய்து அவனை அவன் அசுத்த ஆவிக்கு விடுவிக்க வேண்டும்” என்றார்.

நிம்ரோத் தன்னுடைய மூன்று வேலைக்காரரரை அனுப்பி, ஆபிராமை பிடித்துக் கொண்டு வந்தார். அன்றைய தினம் நிம்ரோத்தும், அவரது புத்திரரும் மற்றும் அரசவையின் அனைத்து வேலைக்காரரும் அரசவையில் உட்கார்ந்திருந்தனர். தேராகுவும் அவர்களோடு உட்கார்ந்திருந்தார்.

நிம்ரோத் ஆபிராமை நோக்கி, நீ உன்னுடைய தகப்பனுக்கும் அவருடைய தெய்வங்களுக்கும் செய்தது என்ன? என்று கேட்டார். உடனே ஆபிராம் தன் தகப்பனுக்குச் சொன்ன உத்தரவின்படியே, தன் தகப்பனுடைய பெரிய தெய்வம் அந்த காரியத்தைச் செய்தது என்று பதிலளித்தார்.

நிம்ரோத் ஆபிராமை நோக்கி, “அவைகளுக்குப் பேசவும், உண்ணவும் அதிகாரம் இல்லையே!” என்றார். உடனே ஆபிராம் அரசனை நோக்கி, “அப்படியானால் அதிகாரமில்லாத அவைகளை ஏன் சேவிக்க வேண்டும்? ஏன் மக்கள் மதியீனமாக தவறிழைக்க வேண்டும்? அவைகள் சிறிய காரியமோ அல்லது பெரிய காரியமோ செய்து தங்களை விடுவிக்க கூடுமோ? ஏன் நீர் இவ்வுலகத்தைப் படைத்த, மனிதர்களை உயிரோடு வைக்கவும், அழிக்கவும் வல்லமையுள்ள தேவாதி தேவனை சேவிப்பதில்லை? மதியீனமான அரசனே, உமக்கு ஐயோ! நீர் உம்மைச் சேவிக்கிற ஊழியக்காரருக்கு நீதியின் வழியை போதியாது போனதென்ன? நீர் இப்பூமி முழுவதையும் அதிலுள்ள அனைத்து மக்களையும் பாவத்திற்குள்ளே வழிநடத்தியதென்ன? நம்முடைய முற்பிதாக்கள் தவறிழைத்தபோது நம் தேவன் அவர்களை ஜலத்தினால் அழித்துப் போட்டதையும், இப்பூமியை அவர்களின் நிமித்தம் அழித்துப் போட்டதையும் கேள்விப்படவில்லையோ?

நீரும் இம்மக்களும் இப்படிப்பட்ட காரியங்களை நடப்பித்து தேவனுடைய கோபத்தை மறுபடியும் இப்பூமியின்மீது வரவழைக்கலாம் என்றிருக்கிறீர்களோ? இப்பொழுதே உம்முடைய வழிகளை விட்டுவிட்டு நம்முடைய தேவனை சேவியும். இன்று நான் உரைக்கும் வார்த்தைகளுக்கு நீரும் உம்முடைய மக்களும் செவி கொடுக்காதே போனீர்களாயின், வெட்கத்தோடே மரணமடைவீர்கள்" என்று கூறி விட்டு, தன் கண்களை பரத்திற்கு நேரே நோக்கி, "தேவன் தாமே இந்த பொல்லாங்கரைப் பார்த்து அவர்களுக்கு நீதி செய்யும்" என்றார்.

ஆபிராமின் வார்த்தைகளைக் கேட்ட நிம்ரோத் அவரை சிறையிலடைக்க உத்தரவிட்டார். ஆபிராம் 10 நாட்கள் சிறையிலிருந்தார். பத்து நாட்களுக்குப் பிறகு, நிம்ரோத், அனைத்து இராஜாக்களையும், பற்பல தேசத்துப் பிரபுக்களையும், ஞானிகளையும், மந்திரவாதிகளையும் வரவழைத்தார். ஆபிராம் சிறையில் இருந்தார். நிம்ரோத் அவர்களை நோக்கி, ஆபிராம் தன் தகப்பனுக்குச் செய்ததையும், ஆபிராமின் பதிலையும், அதற்கு அவர் அனுபவிக்கும் தண்டனையையும் விவரித்து சொன்னார். இப்படிப்பட்டவனுக்கு என்ன தண்டனை வழங்கலாம் என்ற கேள்வியை அவர்கள் முன்பாக வைத்தார்.

அரசனை எதிர்த்துப் பேசின ஆபிராமை மரத்தில் தூக்க வேண்டும். தங்களுடைய சட்டத்தின்படி தங்கள் கடவுளை உடைத்தக் குற்றத்திற்கு அவரை எரித்து கொலை செய்ய வேண்டும். இதைச் செய்ய ராஜாவுக்கு சம்மதியானால், அவருடைய வேலைக்காரரை இரவும் பகலுமாக சூளையைச் சூடுபடுத்தி அவனை அதில் தூக்கியெறிய வேண்டும் என்று ஆலோசனை வழங்கினர்.

நிம்ரோத் தன்னுடைய வேலைக்காரரை நோக்கி, மூன்று நாள் இரவும் பகலும் எரியத்தக்க சூளையை சூடுண்டாக்கி, ஆபிராமை அதில் தூக்கியெறிய கட்டளை கொடுத்தார்.

எல்லா ஊழிக்காரரும், பிரபுக்களும், அதிகாரத்திலிருப்போர், நீதிபதிகள் மற்றும் அந்நாட்டின் குடிமக்கள் அனைவரும் ஏறக்குறைய 90,000 மக்கள் சூளைக்கு எதிராகக் கூட்டம் கூடினர். பெண்கள், சிறுவர்கள் அனைவரும் தங்கள் கூரைகள் மற்றும் கட்டடங்களின் மேலே ஏறி, ஆபிராமுக்கு நிகழப்போகும் காரியத்தை தூரத்திலிருந்து பார்வையிட்டனர். அனைவரும் அங்கே குழுமினர்.

ஆபிராமைப் பார்த்த ஞானிகளும், மந்திரவாதிகளும், "ஆண்டவனே, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, இவன் பிறந்த போது அல்லவா, ஒரு பெரிய நட்சத்திரம் எழும்பி நான்கு நட்சத்திரங்களை விழுங்கிப்போட்டது? இவன் தகப்பன் இவனைத் தராமல் வேறொரு குழந்தையை கொடுத்து உம்மை ஏமாற்றி விட்டானல்லவா?" என்றார்கள்.

நிம்ரோத் கோபத்துடன் தேராகுவை தனக்கு முன்பாக வரும்படி கட்டளையிட்டார். நிம்ரோத் தேராகுவிடம் "இவர்கள் கூறியவற்றை கேட்டீரே! என்னிடத்தில் உண்மையைத் தெரிவியும்" என்றார்.

தேராகு இராஜாவின் கோபத்தைப் பார்த்து, "அவர்கள் உரைத்தது உண்மைதான் ஆண்டவனே!" என்றார். நிம்ரோத் தேராகுவிடம், "நீர் எப்படி இந்த காரியத்தை செய்தீர்? நீர் பெறாத ஒரு பிள்ளைக்காக விலையை பெற்றுக் கொள்ள நீர் துணிவு கொண்டது என்ன?" என்றார்.

தேராகு அவரை நோக்கி, "என்னுடைய பிள்ளையின் மேல் உள்ள அன்பு என்னை அன்று தவறிழைக்கச் செய்துவிட்டது. எனவே என்னுடைய வேலைக்காரியின் குழந்தையை தங்களிடம் கொடுத்துவிட்டேன்" என்றார்.

நிம்ரோத் அவரிடம், "இப்படி செய்ய உனக்கு ஆலோசனைக் கொடுத்தது யார்? நீர் மரிக்காதபடிக்கு உண்மையை என்னிடம் சொல்ல வேண்டும்" என்றார்.

தேராகு பயந்து நிம்ரோத்தை நோக்கி, "என்னுடைய மூத்த மகனாகிய ஆராம் தான் இந்த ஆலோசனையை எனக்குக் கொடுத்தான்" என்று கூறினார். ஆராம் தன்னுடைய தகப்பனிடம் எதையும் கூறவில்லை. தன்னுடைய உயிருக்கு பயந்ததினால் தேராகு தன் ஜீவனைக் காத்துக்கொள்ள இப்படிக் கூறிவிட்டார்.

நிம்ரோத் தேராகுவைப் பார்த்து, "ஆராம் இந்த காரியத்தைச் செய்தபடியால் அவனும் ஆபிராமோடே சாகவேண்டும். ராஜாவின் சித்தத்தைச் செய்ய தடுத்தபடியால் இப்படி ஆகியது" என்றார்.

நடந்தது என்ன?.... (தொடரும்)

நன்றி: யாசேரின் புத்தகம்

தமிழாக்கம் & தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபையைச் சேர்ந்த

Mr. Jacob Raj அவர்களின் தாயார்

Mrs. Kamalam அவர்கள் 13-04-2016 அன்றும்

நமது சபையைச் சேர்ந்த

Mrs. Packiyaselvi Moses அவர்களின் தகப்பனார்

Mr. T.Wilson அவர்கள் 17-04-2016 அன்றும்

கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# திருச்சபை ஜெபநாள் 01-05-2016 (முதல் ஞாயிறு)

"நான் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணுவேன், என் ராஜாவே,
என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும்." சங்கீதம் 5:2

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய ஆண்டைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- திடப்படுத்தல் ஆராதனை ஆசீர்வாதமாக நடந்தேறவும், ஜெபல் அலி ஆலயத்தில் பாடல் ஆராதனை சிறப்பாக நடந்தேறவும், கடந்த மூன்று ஆண்டுகள் உதவி போதகராக சிறப்பாக பணியாற்றிய Rev.Samuel Jebaraj ஐயா அவர்கள் குடும்பத்திற்கு கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காகவும் அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக,
- மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

